சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
Registered as Newspaper
03.12.2020 வியாழக்கிழமை

# வடக்கை புரட்டிய புரேவி



- 11 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் பாதிப்பு
- 57 முகாம்களில் 11 ஆயிரம் பேர்
- ஒருவர் உயிரிழப்பு: 6 பேர் காயம்: இருவரைக் காணவில்லை
- 48 வீடுகள் முழுமையாக சேதம்: 2300 வீடுகள் பகுதியளவில் சேதம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 3

வடக்கை ஊடறுத்துச் சென்ற புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் புயல் காரணமாக மரங்கள் முறிந்து விழுந்ததில் வீடுகள் பலவும் சேதமடைந்தன. புயல் பாதிப்புக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந்துள்ளனர். 02

## வடக்கில் இன்றிரவும் கடும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

வடக்கு மாகாணத்தில் இன்றிரவு பரவலாக நூறு மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியி 02

## காற்று சுழற்சியாலேயே ஆதிகோவிலடியில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

வல்வெட்டித்துறை ஆதி கோவி லடிப் பகுதியில் குறுக்கு வெட்டான குத் தான காற்றுச் சுழற்சி காணப்பட்டமையாலேயே அங்கு அதிகளவான பாதிப் புக்கள் ஏற்பட்டுள்ள தாக யாழ்ப்பாணப் 02

## புயல் கடந்தாலும் இரு தினங்களுக்கு மழை தொடரும்!!!

வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி சதானந்தன் தெரிவிப்பு



வவுனியா, டிசெ. 3

புரேவி புயலின் தாக்கம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இரு தினங்களுக்கு காற்றுடன் கூடிய மழை காணப்படும் என்று வளிமண்டளவியல் திணைக்களத்தின் வவு னியா மாவட்ட பொறுப்ப திகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார். 02

## மாந்தை கிழக்கில் உச்சபட்ச மழைவீழ்ச்சி

### யாழ்ப்பாணத்தில் 245 மி.மீ.

புரேவி புயல் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் வடக்கு மாகாணத்தில் மாந்தை கிழக்கில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 392 மில்லிமீற்றர் மழை அங்கு பதிவாகி யுள்ளது என இடர்முகாமைத்துவ திணைக்களம் தெரிவித் துள்ளது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு 8.30 மணி தொடக்கம் இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் 245.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி யுள்ளது. இந்த ஆண்டில் இதுவே அதிகூடிய மழை வீழ்ச்சி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)



## மிகக் குறைந்த வலுவுடன் மந்தமாக நகர்கிறது புரேவி

யாழ்ப்பாணம், டிசெ. 3

புரேவி புயலானது மிகக் குறைந்த வலுவுடன் மந்த மாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. இன்று மாலை 5 மணிக்கு புயலின் வெளிவளையம் இலங்கையிலி ருந்து வெளியேறும். இது இந்தியாவின் தமிழக மாநிலத்தின் இராமேஸ்வரம் ஊடாக 02



## வங்கக்கடலில் மீண்டும் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கு திசையில் அந்தமான் தீவுகளுக்கு அண்மையாக மற்றொரு தாழமுக்கம் எதிர்வரும் 7ஆம் திகதி உருவாகுவதற்கு வாய்ப்பு 02

கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்ட குளங்களின் நீர்மட்டம் (முழு விவரம்) 10

## புரேவி'யால் பாதிப்பு சிறிதே 4 ஆயிரம் பேரே இடம்பெயர்வு

### வடக்கின் நிலைமையை சபையில் இப்படிக் கூறினார் அமைச்சர் சமல்

கொழும்பு, டிசெ. 3

புரேவி சூறாவளியால் மாவட்டங்கள் சில வற்றில் சிறியளவிலான பாதிப்புகள் ஏற்பட் டுள்ளன எனவும், இதன்போது இடம்பெயர்ந்த ஆயிரத்து 9 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயி ரத்து 7 பேர் பாதுகாப்பு நிலையங்களில் 02



## அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்குங்கள்

### சஜித் சபையில் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 3

புரேவி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண் டிய அனைத்து உதவித்திட் டங்களும் உரிய வகையில் 02

## மழை வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த ஒருவர் உயிரிழப்பு!

சாவகச்சேரி, டிசெ.4

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நபர் ஒருவர் வீதி வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசா லையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் உயிரி ழந்துள்ளார். 02

# வடக்கை....

இருவரைக் காணவில்லை என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தரைப்பகுதிக்குள் புயல் வலுக் குறைந்த நிலையிலும் இவ்வளவு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

**யாழ்ப்பாணம்**

10ஆயிரத்து 572 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 87 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர். கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவரைக் காணவில்லை. 40 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 2 ஆயிரத்து 142 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கடைகள், படகுகள் என்று சிறியளவிலான தொழில் முயற்சி சேதங்கள் 204ஆகப் பதிவாகியுள்ளன. பெரிய அளவிலான கட்டடங்கள் மற்றும் வீதிகள் 6 சேதமடைந்துள்ளன. 33முகாம்களில் ஆயிரத்து 72 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 687 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

292 குடும்பங்களைச் சேர்ந்த 882பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 93 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வீதிகள், கட்டடங்கள் என்று 2 இடங்கள் சேதமடைந்துள்ளன. 2 முகாம்களில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு**

536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 581பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நந்திக்கடலில் தொழிலுக்குச் சென்ற ஒருவரைக் காணவில்லை. ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 4 நலன்புரி நிலையங்களில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் உறவினர் நண்பர்கள் வீடுகளில் 332 குடும்பங்களைச் சேர்ந்த 892 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**மன்னார்**

2 ஆயிரத்து 236 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 748 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 வீடுகள் முழுமையாகவும், 6 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 18 முகாம்களில் ஆயிரத்து 778குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 795பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**வவுனியா**

103 குடும்பங்களைச் சேர்ந்த 334பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 23 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ஓ,5)

# மழை வெள்ளத்தில்...

இந்தச் சம்பவம் இன்று கொடிகாமம் நாகநாதன் வீதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் ஆத்தியடி வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மாகாலிங்கம் மதீஸ் (வயது 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இன்று காலை 8 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் வீதியால் சென்ற போது நபர் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் வெள்ளத்தில் கிடந்துள்ளார். உடனடியாக கொடிகாமம் பொலிஸார் அவரை மீட்டு அண்மையிலுள்ள மிருசுவில் கொடிகாமம் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் இன்று அறிக்கைத் தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கைத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

இவருக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படுவதாகவும் நேற்று இரவு வீடு வந்தவேளையில் மழைநீர் நிறைந்திருந்த குழிக்குள் வீழ்ந்து வலிப்பு ஏற்பட்டு உயிரிழந்து இருக்கலாம் என்று ஒரு சாராரும், தினமும் போதையில் நடமாடும் இவர் இரவு வீட்டுக்கு வரும்போது நீர்க்குழிக்குள் வீழ்ந்து மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்து இருக்கலாம் என்று இன்னொரு சாராரும் தெரிவித்தனர்.(ற9,159)

# வடக்கில்...

யற்றுறை பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்தார்.

நேற்று இரவு பெய்ததைப் போன்று அல்லாமல் மழை பெய்யும். ஆனால் 3 மணித்தியாலங்களுக்கு கன மழை காணப்படும். ஏற்கனவே வெள்ளப் பிரதேசங்களாக உள்ள இடங்கள் தொடர்பில் கூடிய அவதானம் தேவை என்று அவர் குறிப்பிட்டார். (ஓ,5)

# காற்று...

பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் ந. பிரதீபராஜா தெரிவித்தார்.

புயல் தரையைக் கடக்கும் போது அதன் மையப்பகுதியை விட உள்வளையமே எப்போதும் ஆபத்தான தாகும். அதனை அழிவு வளையம் என்று கூறுவார்கள். புயல் கடக்கும் அதன் காற்றுச் சுழற்சி பொதுவாக கடற்கரையோரப் பகுதிகளில் காணப்படும். கடற்கரையோரப் பகுதிகளில் அது குறுக்குவெட்டாக குத்தாகக் காணப்படும். இதனாலேயே வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியில் அதிகளவான தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் காற்றுச் சுழற்சி கிடையாகக் காணப்பட்டது, என்றார். (ஓ,5)

# புயல் கடந்தாலும்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புரேவி புயலின் தாக்கம் வவுனியா மாவட்டத்தில் குறைவாகவே காணப்பட்டது.

கடந்த 24 மணிநேரத்தில் 71.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி வவுனியாவில் பதிவாகியுள்ளதுடன் இந்த சூறாவளியின் தாக்கமானது வவுனியாவில் குறைந்தளவு காணப்பட்டாலும் நாளைய வெள்ளிக்கிழமை மாலை வரையில் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தினங்களுக்கு வவுனியாவில் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதினால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார். (ஓ,18)

# மிகக் குறைந்த....

கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தின் ஊடாக நுழைந்த புயல், வவுனியா மாவட்டத்தின் புளியங்குளம், அம்பலம்பெருமாள் குளம், மன்னார், பூநகரி ஊடாக நகர்கின்றது. இன்று பி.ப. 2 மணியளவில் பூநகரி, மாந்தை மேற்கு பிரதேசத்தில் புயல் காணப்பட்டது. இதனால் இரவு 11 மணி வரையிலான காலப் பகுதியில் குடாக்கடலில் அலையின் உயரம் சுமார் ஒரு மீற்றர் வரையில் காணப்படும். அத்துடன் புயல் வலுக்குறைந்து மந்தமாக நகர்கின்றது. சிலவேளைகளில் அது வலுப்பெற்றால் நெடுந்தீவுக்கு கன மழை கிடைக்கும், என்றார். (ஓ,5)

# புரேவி'யால் பாதிப்பு....

தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் நீர்ப்பாசன அமைச்சரும் அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள், அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இதேவேளை, புரேவி சூறாவளியால் 15 வீடுகள் முழுமை யாகவும், 170 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று இரவு கரையைக் கடந்த புரேவி சூறாவளி தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்றிரவு சூறாவளி இலங்கையின் வடமேற்கு கரையின் ஊடாக திரியாய் கச்சவேலி ஊடாக நாட்டின் நிலப்பரப்புக்குள் புகுந்ததுள்ள நிலையில் இது இன்று மன்னார் ஊடாகப் பயணிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சூறாவளி தாக்கத்தால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 134 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 628 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 949 பேரும், மன்னார் மாவட்டத்தில் 324 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 114 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 422 பேரும் 65 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், என்றார். (ஓ,22,44)

# வங்கக்கடலில் மீண்டும்...

இருக்கிறது என, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா தெரிவித்தார். இது புயலாக மாறுமா, ஆழ்ந்த காற்றமுழுத்த தாழ்வு நிலையாக மாறுமா என்பது தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதியே கணிக்க முடியும் என்று கூறினார். இந்த எதிர்வுகூறல்கள் அனைத்தும் தற்போதைய சூழலில் காணப்படும் நிலைமைகளை அடிப்படையாக வைத்து தெரிவிக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ,5)

# அனைத்து...

விரைவில் வழங்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

'புரேவி புயல் அச்சுறுத்தலுக்கு முன்னாயத்தங்களுடன் முகங்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், மன்னார் மாவட்டம் தொடர்பில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனைத்து உதவி திட்டங்களும் வழங்கப்படவேண்டும், என்றார். (ஓ,44)

# புரட்டிய 'புரெவி'யின்











படங்கள் ஐ.சிவசாந்தன்













நயினாதீவில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ள நீர்....

# புரட்டிய 'புரேவி'யின்





காரைநகர் -பொன்னாலை பாலத்தை மூடிய கடல்.....





புரேவி புயலால் தெற்கு முருகையன் கோயி லடியில் வேரோடு சாய்ந்த மரங்கள்



கல்வியங்காட்டில் குடைசாய்ந்த ஆலமரம்....



புயலால் வீசியெறியப்பட்ட நாவற்குழி அம்மாச்சி உணவகத்தின் கூரைகள்.......



வெள்ளக்காடாய் தோற்றமளிக்கும் தென் மராட்சி கொடிகாமம் சந்தை.......





யாழ். புறநகர்ப் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ளநீர்....



கடும் மழை மற்றும் காற்றினால் காரைநகர் மடத்துக்கரை அம்மன் ஆலயத்தின் முன் வேரோடு சாய்ந்த வேப்பமரம்..





வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் புயலால் சேதமடைந்த வீடுகள்........



புயலால் மின்சார கம்பி அறுந்ததால் பொலி கண்டி கடற்கரைக்கு செல்லும் வீதிக்கு தற்காலி கமாகத் தடை . (ந)

# புரட்டிய 'புரேவி'யின்





புரேவியில் சிக்குண்ட மன்னார் பேசாலை.....





கிளிநொச்சி - கண்டாவளையில்..





மன்னார் - விடத்தல்தீவு கிராமத்தில் வீடுகளுள் உட்புகுந்த கடல் நீர்







வவுனியா வீதியோரங்களில் முறிந்து வீழ்ந்த மரங்கள்





மன்னாரில்...



நிலவும் அசாதாரண காலநிலையால் நிரம்பி வழியும் கிளி நொச்சி மாவட்ட வயல் நிலங்கள்...





பருத்தித்துறை கடற்கரை வீதி கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது.
படங்கள் 26





நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதுடன், வைத்தி யசாலையின் மதிலும் உடைந்து விழுந்துள்ளது.

# புரேவி புயல் மற்றும் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு!!

## *மரங்களும் சாய்ந்தன!!*

*வவுனியா, டிசெ. 3*

வங்காள விரிகுடாவில் உருவாகிய 'புரேவி' புயல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது டன், பலர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



புயல் வவுனியாவில் தாக்கத்தை ஏற்படுத் தும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை முதல் வவுனியா மாவட்டத்தில் இடைவிடாது கனமழை பெய்து வந்ததுடன், நேற்றைய தினம் இரவு முதல் கடுமையான காற்றுடன் கூடிய மழை பொழிந்தது.

கடுங்காற்று காரணமாக செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளதுடன் அங்கு வசிக்கும் இரண்டு குடும் பங்களை சேர்ந்த 9பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கன மழை காரணமாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் 68 குடும்பங்களைச் சேர்ந்த 211 பேர் தமது உறவினர் வீடுகள் மற்றும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சாந்தசோலைப்பகுதி மற்றும் புளியங்குளம் நெடுங்கேணி பிரதான வீதியில் நின்றிருந்த மரங் களும் வேரோடு சாய்ந்து வீதியின் குறுக்காக விழுந்துள்ளன. அந்த வீதிகளூடனான போக்கு வரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன், சிலமணி நேரங்களின் பின்னர் அது வழமைக்கு திரும்பி யிருந்தது.

**தாழ்நிலப்பகுதிகள் நீரில் மூழ்கின**

மாவட்டத்தின் பல்வேறு தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதுடன், விவசாய காணிக ளும் நீரில் மூழ்கியுள்ளன. சீரற்ற காலநிலை காரணமாக வாகனச்சாரதி ஒருவர் படுகாயம டைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர் தகவல்களை சேகரித்துவருகின்றனர். (ஓ,ரி3)



## புதிய நிர்வாகத் தெரிவு

*யாழ்ப்பாணம், டிசெ.3*

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொதுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது

தலைவராக ப.தவராசா, உபதலைவ ராக சி. விஜகுமார், செயலாளராக சி. பாலையா, நிர்வாக சபை உறுப்பி னர்களாக தி. நவம், சி.குணசிங்கம், அ.அலெஸ்க்ஸ்டீபன்சன், ம. சதீஸ்கு மார், த. ரசீபன், திருமதி. வி. சரோ ஜினி ஆகியோரும் தெரிவுசெய்யப் பட்டனர். (ந-63)



அச்சுவேலி - தொண்டைமனாறு வீதியால் வெள்ள நீர் மேவி பாய்வதால் குறித்த வீதியால் பயணம் செய்யும் மக்களுடைய போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

# மனித உரிமைகள் சகலருக்கும் சமமே!

## நியூசி. தமிழ் பெண் எம்.பி தெரிவிப்பு

*கொழும்பு, டிசெ.3*

மனித உரிமைகள் அனைவருக்கும் சொந்தமானவை என்று நியூசிலாந்தின் முதலாவது இலங்கை வம்சாவளி தமிழ் பெண் நாடாளுமன்ற உறுப்பினரான வனுஷி வோல்ட்ஸ் ராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து நாடாளுமன்றத்துக்கு அவர் தெரிவான பின்னர் நேற்று தனது கன்னி உரையை ஆற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தமிழிலும் சிங்களத்திலும் தமது பதிவுகளைச் செய்துள்ளார். அதாவது "மனித உரிமைகள் அனைவருக்கும் சொந்தமானவை", "மானவ இமிகம் சியலுதெனாட்டம அயித்தி"என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

1990 ஆம் ஆண்டு எனது தந்தையாரின் உறவினரான ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்ஸா அப்போதைய இலங்கை அரசாங்கத்தை விமர்சித்தமைக்காக கொல்லப்பட்டார். இதுவே என்னை மனித உரிமைகளுக்காக எதையாவது செய்யவேண்டும் என்று தூண்டியது. 27 வருட மனித உரிமை சட்டத்தரணியாக இருந்துள்ளேன். அந்தவகையில் உலகில் பல இடங்களில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ற-இ)



# இலங்கையின் கரையை கடந்து பாம்பனை நெருங்கிய 'புரெவி'!

வங்கக் கடலில் கடந்த மாதம் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாகவும் பின்னர் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் உருவெடுத்து, புயலாக நேற்று வலுப்பெற்றது. 'புரேவி' என பெயரிடப்பட்ட இந்த புயல் நேற்று இலங்கையைக் கடந்த நிலையில், இன்று மன்னார் வளைகுடா பகுதியை கடந்து தமிழக கடலோர பகுதிகளை அடையும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியிருந்தது. தற்போது வங்கக்கடலில் பாம்பனுக்கு 90 கி.மீ. தொலைவில் புரெவி புயல் மையம் கொண்டுள்ளது. மேலும் மணிக்கு 12 கி.மீ வேகத்தில் புரெவி புயல் பாம்பனை நெருங்கிக்கொண்டிருக்கிறது எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இலங்கையின் திருகோணமலையில் நேற்று கரையைக் கடந்த புரெவி புயல் பாம்பன், குமரி இடையே இன்று இரவு அல்லது நாளை அதிகாலைக்குள் மீண்டும் கரையைக் கடக்கும் எனவும் தெரிவித்துள்ளது. வானிலை ஆய்வு மையம். புரெவி புயல் இலங்கையில் கரையை கடந்துள்ள நிலையில் அதன் தாக்கம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இரவு மழை பெய்தது.

இந்த நிலையில் மலாய் தீபகற்பம் அருகே நிலவும் வளிமண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தெற்கு அந்தமானில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை உருவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## புரேவியால் சரிந்து விழும் ஆபத்தில் தண்ணீர் தாங்கி

*கிளிநொச்சி, டிசெ. 3*

வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை 4.5 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கி சரிந்துவிழும் நிலையில் காணப்படுகிறது.

புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் தண்ணீர் தாங்கியின் தரைப் பகுதியில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அது சரிந்து விழும் அபாயம் காணப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி இது விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இரண்டு மாதங்கள் மாத்திரமே தண்ணீர் வழங்கல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

அது அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஒ,6)

## "மீட்டரான வாழ்க்கை" கொரோனா விழிப்புண்வு

*யாழ்ப்பாணம், டிசெ.3*

நெல்லியடி பொலிஸாரும், இளைஞர் சேவை மன்றமும் இணைந்து கொரோனா தடுப்பு நடவடிக்கையாக "மீட்டரான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளில் இன்றைய தினம் காலை 10 மணிக்கு நெல்லியடி நகர் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டுதல் மற்றும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு அறிவித்தல் வழங்கும் நிகழ்வு ஆகியன இடம்பெற்றன.

நிகழ்வில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உதவி பொலிஸ், நெல்லியடி பொலிஸார், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ந-160)





# பாதிப்புக்களைப் பார்வையிட்ட மன்னார் மாவட்டச் செயலர்

*மன்னார், டிசெ. 3*

புரேவிப் புயல் தாக்கத்தால் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை இன்று காலை 6 மணியிலிருந்து மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டிமெல் நேரடியாகப் பார்வையிட்டு வருகின்றார்.

இடர்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களை அச்சுறுத்திய புரேவிப் புயலால் நேற்றுக் காலை முதல் கடும் காற்றுடன் பெய்து வந்த கடும் மழையால் மாவட்டம் முழுவதும் பெரிய பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் பல கிராமங்களில் வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். வங்காலை பேசாலை உள்ளிட்ட கரையோர கிராமங்களில் உள்ள மீனவர்களின் படகுகள் வலைகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு வாடிக் குடிசைகள் காற்றில் தகர்த்து எறியப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 907 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 294 பேரும், மன்னார் நகர்ப்பகுதியில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர், என்றார். (ஒ,213)



# இருபாலையிலும் பாதிப்புக்கள்

கோப்பாய், டிசெ. 3

புரேவி புயலால் கடும்மழை மற்றும் பலத்த காற்று காரணமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆனந்தபுரம், ஞானவைவரவர் கோயிலடி, வசந்தபுரம், மடத்தடி போன்ற கிராமங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக செயலிழந்துள்ளது.

புதிய செம்மணி வீதி, கட்டப்பிராய் கலைமணி வீதி, சின்னக்கோவில் வீதி மற்றும் பல வீதிகள், ஒழுங்கைகள் மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் மக்கள் போக்குவரத்து செய்யமுடியாமல் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். (ஒ,20)




# மழையால் கட்டைப்பறிச்சான் போக்குவரத்துக்குப் பாதிப்பு..!

திருகோணமலை, டிசெ.3

மூதூர் கிழக்கு பகுதியிலுள்ள கட்டைப் பறிச்சான் இறால்ப் பாலத்தை மேவி வெள்ளநீர் பாய்ந்து வருவதால், களப்புப் பகுதியில் நீர் மட்டம் தற்போது அதிகரித்து வருகின்றது.

இதனால் பள்ளிக்குடியிருப்பு, அம்மன் நகர், கணேசபுரம், பள்ள வெளி, சந்தணவெட்டு ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் நிலைமைகளை மூதூர் பிரதேசசபைத் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இந்தப் பாலம் நீண்டகாலமாக உடைந்த நிலையில் காணப்படுவதால் இப்பாலத்தின் ஊடாக பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை தினமும் எதிர்நோக்கி வருகின்றனர். இப் பாலத்தை புனரமைக்க இனியாவது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-40)

# விபத்தில் மூதாட்டி படுகாயம்!

சாவகச்சேரி, டிசெ.3

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் குடையுடன் வீதியோரமாக நடந்து சென்ற மூதாட்டியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றது.

இதில் தலையில் பலத்த காயமடைந்த மூதாட்டி (வயது-84) சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. அந்த மூதாட்டி சந்தையில் பொருள்கள் வாங்கச் சென்ற வேளையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற-9)

# மின்சாரம் தாக்கி ஒருவர் சிகிச்சையில்!

சாவகச்சேரி, டிசெ.3

மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்த்தர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி -சங்கத்தானையில் இடம்பெற்றது.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் தொலைக்காட்சிப் பெட்டிக்கு இணைப்பு வழங்கியபோது மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ற-9)



# வெட்டி அகற்றப்படும் பழமையான மரங்கள்

## ஏ-9 வீதி தற்காலிக பூட்டு

வவுனியா,டிசெ.3

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக காணப்பட்ட பழமை வாய்ந்த மரங்களால் ஏ9 வீதியின் ஒரு பகுதி மூடப்பட்டுள்ளது.

'புரவி' புயல் காரணமாக வவுனியா மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன் காற்றுடன் கூடிய மழை நீடித்த வண்ணமுள்ளது. இதனால் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள பழமை வாய்ந்த மரங்களை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந் நடவடிக்கை காரணமாக ஏ9 வீதியில் வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து வவுனியா நீதிமன்ற வளாகம் வரையான பாதை ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. (ந-18)

# சாவகச்சேரி பகுதியில் ஆறு வீடுகளில் திருட்டு

சாவகச்சேரி, டிசெ. 3

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் நேற்று நள்ளிரவு ஐந்து பேர் கொண்ட குழு ஆறு வீடுகளில் திருட்டிலும் கொள்ளையிலும் ஈடுபட்டுள்ளது என்று தெரியவருகின்றது. பெருங்குளம் பிள்ளையார்கோவில் தொடக்கம் வேதவனப் பிள்ளையார்கோவில் வரையிலான பகுதிகளில் இந்தக் குழு திருட்டில் ஈடுபட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள இரு வீடுகளுக்கு முன்பாக பொருத்தியிருந்த ரகசிய கண்காணிப்புக் கமராக்களை உடைத்துச் சேதப்படுத்திய பின்னர் குறித்த குழு திருட்டில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. மூதாட்டி ஒருவரைத் தாக்கியும் பணம் பறிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-9)

# கண்டாவளையில் 40 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை, பெரியகுளம், தருமபுரம் ஆகிய கிராமங்களின் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் 40 குடும்பங்கள் புரேவி புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கானக்கான விளை நிலப் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பெரியகுளம் ஊடாக வட்டக்கச்சி செல்வதற்கான பிரதான வீதியிலும் வெள்ளம் ஊடறுத்து பாய்ந்து வருகின்றது. (ஓ,113)

# சாவகச்சேரியில் கடல்நீர் வீடுகளுக்குள் புகுந்தது

சாவகச்சேரி, டிசெ. 3

சாவகச்சேரி மகிழங்கேணிப் பகுதியில் கடல் வெள்ளம் குடியிருப்புக்குள் புகுந்தால் அங்கு வாழ்ந்த குடும்பங்கள் அயலில் உள்ள சக்தியம்மன் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நேற்றிரவு படையினர் நிலவிரிப்பு, தறப்பாள், நுளம்பு வலை போன்றவற்றை வழங்கினர். (ஒ,9)







# சேதமடைந்துள்ள வீதிகளை கண்டுகொள்ளாத எம்.பிகள்

## சாந்தசோலை கிராம அமைப்புக்கள் விசனம்

வவுனியா, டிசெ.3

வீதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் சேதமடைந்த வீதிகளைச் சீரமைப்பதற்கு முன்னுரிமை வழங்க ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாந்தசோலை கிராம அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

வவுனியாவில் பல வீதிகள் காப்பெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் போக்குவரத்து செய்யும் நிலையில் காணப்படும் வீதிகள் காப்பெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் பொதுமக்கள் பயணம் செய்ய முடியாதளவுக்கு சேதமடைந்த பல வீதிகள் கவனிப்பாரற்று கைவிடப்பட்டுள்ளன. இந்த நிலை கவலைக்குரியதாகும். கிரவல் இடப்பட்டு பல ஆண்டுகளாக புனரமைப்புச் செய்யப்படாமல் சாந்தசோலை கிரேஷர் வீதி உள்ளது. இதனைச் சீரமைத்துத்தருமாறு கடந்த ஆட்சியாளர்கள் உட்பட பிரதேச சபை என பல்வேறு தரப்பினரிடம் கோரியும் அது நடைபெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரத்தியேக செயலாளர்கள் ஊடாக ஆய்வு செய்து சேதமடைந்த வீதிகளைச் சீரமைக்கவும், மக்கள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளை காபெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யவும் முன்வரவேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (வ-இ)

# புயலால் சரிந்த மரம்: மோதியது பாரவூர்தி

## சாரதி காயம்

வவுனியா, டிசெ. 3

வவுனியா கண்டி வீதி தபால் நிலையத்துக்கு முன்பாகவிருந்த பெரிய மரம் இன்று அதிகாலை மூன்று மணியளவில் முறிந்து வீழ்ந்தமையால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது. வீதியில் வீழ்ந்து கிடந்த மரத்துடன் பாராவூர்தியும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

வவுனியாவில் நிலவிவரும் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக தபால் நிலையத்துக்கு முன்பாக காணப்பட்ட பழமைவாய்ந்த மரமொன்று வீதியின் குறுக்கே முறிந்து வீழ்ந்தது.

அதனை அவதானிக்காது வந்த பாரவூர்தி மரத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ,18)



காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும்

# உறவுகளின் போராட்ட கொட்டகையும் சரிவு

வவுனியா, டிசெ. 3

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களது உறவினர்களால் வவுனியா மாவட்டத்தில் போராடுவதற்காக அமைக்கப்பட்ட கொட்டகையும் புரவிப் புயலின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளது. அருகிலிருந்து மரம் ஒன்றின் பெரிய கிளை முறிந்து போராட்டக் கொட்டகை மீது வீழ்ந்துள்ளது. இதனால் கொட்டகை சேதமடைந்துள்ளது. (ஓ,5)



அரியாலை, செம்மணி வீதி



# வெடிபொருள்களுடன் நால்வர் கைதாகினர்

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் வெடிபொருள்களுடன் நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளை மீளவும் உருவாக்க முயற்சித்தார் என்று சுட்டுக்கொல்லப்பட்ட கோபி என்பவரின் வீட்டில் இருந்தே மேற்படி வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை கால்துடைப்பானில் மறைத்துவைத்துக் கொண்டு செல்லப்பட்ட வெடிபொருள்கள் சில பேருந்தில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன. அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் தம்பதியர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் மேலதிகமாக புதைத்து வைக்கப்பட்டிருந்த சில வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளை மீள உருவாக்க முயற்சி செய்வதாக தேடப்பட்டு வந்த நிலையில் சுட்டுக்கொல்லப்பட்ட கோபியின் வீட்டில் இருந்தே மேற்படி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவருடைய தாய் மற்றுமொரு வயோதிபப் பெண் என நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தயானுஜன் அம்பிகா, சிங்கராஜா தயானுஜன், செல்வநாயகம் ராசமலர், குலசிங்கம் புவனேஸ்வரி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகவும், மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தாலும் அரசின் மீது தென்னிலங்கையில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ள நிலையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6,113)

# மக்கள் நலன் வேண்டி ஆலயங்களில் ஹோமம்

யாழ்ப்பாணம், டிசெ.3

உலக மக்கள் அனைவரதும் நலன் வேண்டி முன்னெடுக்கப்படும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானத்தில் சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் மானிப்பாய் கட்டுடை அரசடி பிள்ளையார் ஆலயத்தில் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடைபெறவுள்ளது. பூஜை வழிபாடுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையின் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பாகும். (வ-இ)

### பைசர் – பயோன்டெக்

# தடுப்பூசி செலுத்த பிரிட்டன் சம்மதம்

லண்டன், டிசெ. 3





கொரோனாவுக்கு எதிரான பைசர்- பயோன்டெக் தடுப்பூசியைப் பயன்படுத்த உலகின் முதல் நாடாக பிரிட்டன் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. பிரிட்டனில் இந்த மருந்து அடுத்த மாதம் முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

இது ஒரு நல்ல செய்தி என்று அறிவித்திருக்கும் சுகாதார அமைச்சர் மெட் ஹான்கொக், இதனை விநியோகிக்கும் திட்டம் அடுத்து வார ஆரம்பத்தில் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இந்த மருந்தைப் பெறும் முதன்மைக் குழுவினர் யார் என்பது பற்றி பிரிட்டன் தடுப்பு மருந்துக் குழு தீர்மானிக்கவுள்ளது. சுகாதார சேவை பணியாளர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மருத்துவ ரீதியில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொரோனாவால் அதிக உயிரிழப்பு பதிவாகிய ஐரோப்பிய நாடாக பிரிட்டன் உள்ளது. அங்கு 1.6 மில்லியனுக்கு மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன் 59 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பைசர் மற்றும் பிரிட்டன் கூட்டாண்மையான பயோன்டெக் இணைந்து மேம்படுத்தி இருக்கும் இந்தத் தடுப்பு மருந்து 90 வீதத்துக்கும் அதிக செயல்திறன் கொண்டது என்பது சோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. (வ-இ)

## கிளிநொச்சி– முல்லைத்தீவு மாவட்டங்களின் குளங்களின் நீர்மட்டம்

| குளம் | கொள்ளளவு | தற்போதைய நிலை |
|---|---|---|
| அக்கராயன் | 25 அடி | 17.6 அடி |
| கரியாலை | 10 அடி | 5.5 அடி |
| புதுமுறிப்பு | 19 அடி | 15.1 அடி |
| குடமுருட்டி | 8 அடி | 8.8 அடி |
| வன்னேரி | 9.6 அடி | 9அடி |
| இரணைமடு | 36 அடி | 22.8அடி |
| கல்மடு | 26 அடி | 21.1அடி |
| பிரமந்தனாறு | 12அடி | 8.1அடி |
| கனகாம்பிகை | 10.6 அடி | 9.11அடி |
| வவுனிக்குளம் | 26 அடி | 18.3 அடி |
| தெணியான்குளம் | 9.8 அடி | 9 அடி |
| ஐயன்கன்குளம் | 12.4 அடி | 13.4 அடி |
| அம்பலப்பெருமாள் குளம் | 10அடி | 9 அடி |
| கல்விளான்குளம் | 11.4 அடி | 10.8 அடி |
| மருதன்குளம் | 9.6 அடி | 10 அடி |
| பழையமுறிகண்டி | 9.6 அடி | 10.3 அடி |
| கோட்டைகட்டியகுளம் | 9.6 அடி | 10.9அடி |
| கொள்ளிவிளாங்குளம் | 11.2 அடி | 11.8அடி |
| மல்லாவிக்குளம் | 12.6 அடி | 11.1அடி |
| தேரங்கண்டால்குளம் | 11.2அடி | 11.1 அடி |
| பனங்காமம் | 9.6 அடி | 8.6 அடி |
| முத்தையன்கட்டு | 24 அடி | 15.2 அடி |
| கணுக்கேணி | 12.6அடி | 12,9 அடி |
| உடையார்கட்டு | 23.4 அடி | 21.8 அடி |
| தண்ணிமுறிப்பு | 21அடி | 20.6 அடி |
| மடவளசிங்கம்குளம் | 16.6 அடி | 14.11அடி |
| விஸ்வமடுகுளம் | 20.3 அடி | 18.2 அடி |
| மருதமடுக்குளம் | 14.02 அடி | 14.1அடி |
| தட்டையன்மலைக்குளம் | 13.9அடி | 14.6 அடி |



# நிலவைத் தொட்டது சீனாவின் விண்கலம்

பீஜிங், டிசெ. 3

சீனாவின் ஆய்வு விண்கலமான சாங் இ-5 வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியுள்ளது. நிலவின் எரிமலைப் பகுதியான மொன்ஸ் ரும்பர் என்ற பிரதேசத்தையே இந்த ஆய்வு விண்கலம் இலக்கு வைத்துள்ளது.

அடுத்த சில நாள்களை நிலவில் கழிக்கவிருக்கும் இந்த ஆய்வு இயந்திரம் அதன் சுற்றுப்பகுதியை ஆய்வு செய்து மேற்பரப்பில் உள்ள பொருள்களை சேகரிக்கவுள்ளது. இந்த ஆய்வு இயந்திரத்தில் கமரா, ஸ்பெக்ட்ரோமீற்றர், ராடார், கரண்டி மற்றும் தோண்டும் கருவி போன்ற பல கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

நிலவில் இருந்து 2 கிலோகிராம் மண் அல்லது பாறைகளை சேகரித்து பூமிக்கு எடுத்து வருவதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதன்போது இந்த ஆய்வு இயந்திரம் 2 கிலோமீற்றர் வரையில் நிலவின் மேற்பரப்பில் துளையிட்டு மாதிரிகளை சேகரிக்கவுள்ளது. 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலவில் இருந்து மாதிரிகளை எடுத்துவரும் முதல் விண்கலமாகவும் இது பதிவாகவுள்ளது. கடந்த மாதம் 24ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம், சனிக்கிழமை அன்று நிலவின் நீள்வட்டப்பாதைக்குள் நுழைந்ததை தொடர்ந்து படிப்படியான நடவடிக்கைகள் மூலம் ஆய்வு இயந்திரம் தரையிறக்கப்பட்டுள்ளது. (வஇ)




# சச்சின் சாதனையை முறியடித்தார் கோலி

புதுடில்லி, டிசெ.3

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், கோலி அதிவேகமாக 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற சாதனையை எட்டினார். ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது. இதில் சிட்னியில் நடந்த முதல் 2 ஆட்டங்களில் முறையே 66 ஓட்டங்கள் மற்றும் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வியடைந்தது டன. மூன்றாவது ஆட்டத்தை வென்றபோதும், தொடரை 21 என்ற கணக்கில் பறிகொடுத்தது.

மூன்றாவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி ஆஸ்திரேலிய தலைநகரான கான்பெர்ராவிலுள்ள மனுகா ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்ச்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. அதில் இந்திய அணித் தலைவர் கோலி 23 ஓட்டங்கள் எடுத்தபோது, சர்வதேச ஒருநாள் போட்டிகளில் புதிய சாதனையை படைத்தார். விரைவாக 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்து, சச்சினின் உலக சாதனையை முறியடித்தார். சச்சினின் 309 ஒருநாள் போட்டிகளில் (300 சுற்றுக்கள்) விளையாடி 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்திருந்தார். கோலி இந்த இலக்கை 251 ஆவது போட்டியில் (242 சுற்றுக்கள்) எட்டினார். (ற-இ)